**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**O.S. No. 25 / 2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 09.01.2024 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பெயர் Rajendran (P.W.2)

வாதி தரப்பு சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் செய்யப்படும் குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க கோரி நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி செல்வராஜ் சொல்லி தான் இந்த வழக்கை பற்றி எனக்கு தெரிய வந்தது. அவர் தரப்பில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கில் என்ன நடக்கிறது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி தான். நான் இந்த வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் சரி தான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை வாதி தயார் செய்து கொடுத்து அதில் கையொப்பம் மட்டும் தான் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை வாதி செல்வராஜ் அவருக்கு இடத்தை விற்ற சகாதேவன் மற்றும் அவருடைய இடத்தை ஆக்கிரமித்த நபர் மீது தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். இடத்தை ஆக்கிரமித்த நபரின் பெயர் எனக்கு தெரியாது. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். நானும் சகாதேவனும் நண்பர்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர் எங்கள் ஊரில் வசித்து வந்தார். கோவிலுக்கு வரும் போது பழக்கம் ஏற்பட்டது. 2ம் பிரதிவாதியான சகாதேவன் மாரடைப்பினால் இறந்தார். அவர் எப்போது இறந்தார் என்று தேதி நினைவில்லை. 2ம் பிரதிவாதியான சகாதேவனுக்கு 1 மனைவி, 2 மகன்கள் மற்றும் 1 மகள் வாரிசுதாரர் ஆவார்கள்.

2. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் இந்த வழக்கின் விவரங்கள் தெரியும் என்று கூறியுள்ளேன். ஆக்கிரமிப்பாளர் ஆக கூறப்படும் நபர் சகாதேவனிடம் எப்போது சொத்தை கிரையம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியான புவனேஸ்வரிக்கு 2ம் பிரதிவாதியான சகாதேவன் எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் எழுவும் போடவில்லை. நானும் 2ம் பிரதிவாதி சகாதேவனும் நண்பர்கள் என்று தவறுதலாக கூறியுள்ளேன் என்றும் அவர் இறந்த காரணத்தினால் அவ்வாறாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியான சகாதேவன் வாதி செல்வராஜுக்கு விற்ற சொத்தை 1996ம் ஆண்டு பொது அதிகாரப்பத்திரம் மூலம் கிடைக்கப்பெற்றது. வாதி 2ம் பிரதிவாதியான சகாதேவனிடம் 5586 சதுரடி கிரையம் வாங்கியுள்ளார். வாதி சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பாக வில்லங்கம் பார்த்து தான் வாங்கினார். நான் சொல்வது தவறு என்றும் வாதி உண்மையிலேயே வில்லங்கத்ததை சரி பார்த்து இருந்தால் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற விவரம் தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவொதியிடம் வாங்கிய கிரைய பத்திரத்தில் எ.எம். கண்ணன் என்ற நபர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றும் அவரை தெரியுமா என்றால் அவரை எனக்கு தெரியாது. வாதி செல்வராஜ் வாதசாஆ.1 ஐ கிரையம் பெற்ற போது

என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த மற்ற நபர் திரு. எ.எம் கண்ணன் ஆகும். அந்த எ.எம்.கண்ணன் தான் பிரதிவாதியின் கிரையப்பத்திரத்திலும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. என்னுடைய பிரமாண பத்திரத்தில் வாதி தான் தாவா சொத்தை கிரையம் பெற்ற நாள் முதல் சுவாதீனத்தில் உள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன். 1ம் பிரதிவாதி புவனேஸ்வரி 1263 சதுரடியை 1999ல் கிரையம் பெற்று அவர் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அவர் வாங்கிய சொத்தில் முள்வேலி அமைத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் பார்க்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். அதில் 1ம் பிரதிவாதி வீடு கட்டி மின் இணைப்பு பெற்று சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி செல்வராஜ் சகாதேவனுக்கு எதிராக ஏற்கனவே அசல் வழக்கு எண். 127/2016 மாவட்டம் உரிமையியல் நீதிமன்றம் திருவொற்றியூரில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி பட்டா பெற எடுத்த நடவடிக்கையை வாதி எப்போது தடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி உண்மைக்கு புறம்பான சங்கதிகளைக் கொண்டு எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். உண்மைக்கு புறம்பான சங்கதிகள் என்று எதைக் குறிப்பிடுகிறேன் என்றால் வாதியின் இடத்தை 1ம் பிரதிவாதி உரிமை கோருவதால் அவ்வாறாக கூறியுள்ளேன்.

4. வாதி 1ம் பிரதிவாதிக்கு எதிராக மாதவரம் காவல் நிலையத்தில் எந்த தினத்தில் புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியான புவனேஸ்வரி தான் வாதிக்கு எதிராக 25.06.2014 அன்று மாதவரம் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி புவனேஸ்வரி 150 சதுரடி மட்டும் தான் வீடு கட்டியுள்ளார் என்று தவறுதலாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 1263 சதுரடியில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும் வாதி கூறியதன் அடிப்படையில் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றும் ஆகையால் என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2024.01.09 14:06:33 +0530

Subordinate Judge,
Thiruvottiyur.